**சுருக்கம்**

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு - முதலமைச்சரின் தலைமை உரை அறிவிப்பு - நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை குடும்பங்களுக்கு கழிப்பறை வசதி ஏற்படுத்திக் கொள்ள ரூ.1,000/- வீதம் ஒரு இலட்சம் குடும்பங்களுக்கு நிதியுதவி அளித்திடும் திட்டம் 1,00,000 குடும்பங்களுக்கு ரூ.1,000/- வீதம் வழங்குவது - முதல் கட்டமாக ரூ.5 கோடி விடுவித்து ஆணையிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.2)துறை**

அரசாணை(நிலை) எண்.161 நாள்: 30.12.2006

படிக்கப்பட்டவை:

1. பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை-108, கடிதம் எண்.ந.க.17308/2006/ஆ4, நாள்: 10.10.2006.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-5, கடிதம் ந.க.எண்.62346/06/யுபிஏ4, நாள்.26.11.2006.

ஆணை:

18.9.2006 - ஆம் நாளன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் வளர்ந்து வரும் நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை எளியக் குடும்பங்களுக்கு தமது இல்லங்களில் கழிப்பறை வசதியை ஏற்படுத்திக் கொள்ள ஒரு இலட்சம் குடும்பங்களுக்கு தலா ரூ.1000/- வீதம் நிதியுதவி அளித்திடும் திட்டம் ஒன்றை - ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் இந்த ஆண்டிலிருந்தே செயல்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிப்பு செய்யப்பட்டது.

2. மேற்கண்ட திட்டம் பேரூராட்சிகளில் 80,000 குடும்பங்களுக்கும் மற்றும் நகராட்சிகளில் 20,000 குடும்பங்களுக்கும் செயல்படுத்தப்படும். அதன்படி பேரூராட்சிகளில் ஏழை எளிய குடும்பங்கள் வசிக்கும் 80,000 வீடுகளில் கழிப்பறை வசதி ஏற்படுத்திக்கொள்ள ரூ.8.00 கோடியும், இத்திட்டம் பற்றிய நலன்களையும், விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் பிரச்சாரப் பணிக்கு ரூ.3.00 கோடியும் ஆக மொத்தம் ரூ.11.00 கோடி பேரூராட்சிகள் துறைக்கு ஒதுக்கீடு செய்யக் கோரி இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான வரைவு வழிகாட்டு நெறிமுறைகளுடன் பேரூராட்சிகளின் இயக்குநர் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். நகராட்சி நிர்வாக ஆணையாளர் 20,000 குடும்பங்களுக்கு தலா ரூ.2,000/- வீதம் மானியம் வழங்க ரூ.4.00 கோடி மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரத்திற்கு ரூ.25.00 இலட்சமும் ஆகமொத்தம் ரூ.4.25 கோடி கேட்டு அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்.

3. பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் ஆகியோரின்

செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக பேரூராட்சி பகுதிகளில் 40,000 குடும்பங்களுக்கும் நகராட்சிப் பகுதிகளில் 10,000 குடும்பங்களுக்கும் ஒரு குடும்பத்திற்கு தலா ரூ.1000/- வீதம் இத்திட்டத்தினை ''புதுப்பணிகள்'' என்ற தலைப்பின் கீழ் ஏற்றுக் கொண்டு அமுல் படுத்தலாம் என்றும் முடிவு செய்துள்ளது. அதன்படி ரூ.4 கோடியை (ரூபாய் நான்கு கோடி மட்டும்) பேரூராட்சி இயக்குநருக்கும் மற்றும் ரூ.1.00 கோடி (ரூபாய் ஒரு கோடி மட்டும்) நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கும் ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் இந்த ஆணையின் இணைப்பில் கூறப்பட்டுள்ளன.

4. இத்திட்டம் பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரத்திற்கு ''முழு சுகாதார விழிப்புணர்வு'' திட்டத்தினை அமல்படுத்தும்போது பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் ஏற்பட்ட பிரச்சனைகளைக் கருத்தில் கொண்டு, மேற்படி திட்டத்தை அமல்படுத்த ஒரு விரிவான செயற்குறிப்பினை பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அரசுக்கு உடன் அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

5. மேற்கண்டவாறு நிதித்தொகையை பெற்றுக்கொள்ள பேரூராட்சிகள் இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் ஆகியோருக்கு அதிகாரம் அளித்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 3ல் வழங்கப்பட்டுள்ள மானியத்தொகையை கீழ்க்கண்ட தலைப்பின் கீழ் பெற்றுக்கொள்ள பேரூராட்சிகள் இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

''(அ) ரூ.4.00 கோடி பேரூராட்சி பகுதிகளுக்கு:-
2217 நகர்ப் பகுதி வளர்ச்சி - 80 பொது - 193 நகர ஊராட்சிகள் அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள் அல்லது அதற்கு நிகரான குழுக்களுக்கு உதவி - பத்தாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் - **II** மாநிலத் திட்டம் - **JA** -போரூராட்சி பகுதிகளுக்கு கழிப்பிட வசதி செய்து கொடுப்பதற்கு அரசு மானியம் - 09 உதவி மானியங்கள் -02 மூலதனச் செலவுக்கான மானியங்கள் (த.தொ.கு.2217 - 80 - 193 - **JA**- 0923)
(ஆ) ரூ.1.00 கோடி நகராட்சிப் பகுதிகளுக்கு:-
''2217 நகர்ப் பகுதி வளர்ச்சி - 80 பொது - 192 நகராட்சிகள், நகராட்சி மன்றங்கள் முதலியவற்றுக்கு நிதி உதவி - பத்தாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் - **II** மாநிலத் திட்டம் - **JC** - நகராட்சி பகுதிகளுக்கு கழிப்பிட வசதி செய்து கொடுப்பதற்கு அரசு மானியம் - 09 உதவி மானியங்கள் - 02 மூலதனச் செலவுக்கான மானியங்கள் (த.தொ.கு.2217 - 80 - 192 - **JC** - 0921)''

7.பேரூராட்சிகளின் இயக்குநர் / நகராட்சி நிர்வாக ஆணையர் ஆகியோர் மேற்கண்ட புதிய துணை கணக்குத் தலைப்பிற்கான மதிப்பீடு, ஒப்பீடு மற்றும் கட்டுப்பாட்டு அலுவலர்கள் ஆவார்கள். சம்மந்தப்பட்ட சம்பளக்கணக்கு அலுவலர்கள் மேற்குறிப்பிட்ட துணைக்கணக்குத் தலைப்பை தங்களுடைய கணக்குகளில் துவக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8.மேலே பத்தி 3ல் அனுமதிக்கப்பட்ட செலவுத் தொகையானது புதுப்பணியாகும் என்பதால் சட்டமன்ற பேரவையின் அனுமதி உரிய நேரத்தில் பெறப்படும். சட்டமன்ற பேரவையின் அனுமதியை எதிர் நோக்கி இச்செலவினமானது முதற்கண் எதிப்பாரச் செலவு நிதியிலிருந்து முன்பணம் பெற்று செலவிடப்படும். பேரூராட்சிளின் இயக்குநர்

மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் ஆகியோர் எதிர்பாரச் செலவு நிதியிலிருந்து முன்பணம் பெறுவதற்கு உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் அரசின் நிதி (வரவுசெலவு பொது ஐ) துறைக்கு விண்ணப்பிக்குமாறு கோரப்படுகிறார்கள். மேலும் பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் ஆகியோர் மேற்கூறப்பட்ட செலவினத்தை 2006-2007 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மதிப்பீட்டில் சேர்ப்பதற்குத் தேவையான வரைவு விளக்கக்குறிப்பினை உரிய நேரத்தில் அனுப்புமாறு கோரப்படுகிறார்கள்.

9.இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.82445/நிதி (ந.நி.கு.வ)/ 2006, நாள் 29.12.2006 ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.1276 (ஆயிரத்து இருநூற்று எழுபத்து ஆறு).

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-5.
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை-108.
சம்பள கணக்கு அலுவலர்( கிழக்கு/வடக்கு) சென்னை5/1.
மாநில கணக்காய்வு தலைவர் சென்னை-18.(பெயரில்)
மாநில கணக்காய்வு தலைவர், சென்னை-18.
மாநில கணக்காய்வு தலைவர்(உ.த), சென்னை-9.
நிதித் (BG.I/BG.II / MAWS)துறை, சென்னை-9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (வரவுசெலவு(ம) அ.ந.2) துறை, சென்னை-9.
முதலமைச்சரின் செயலாளர், சென்னை-9.
நிதியமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
உள்ளாட்சித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

இணைப்பு

இல்லங்களில் கழிப்பிட வசதிகள் இல்லாத நகர்ப்புறங்களில் வாழும் ஏழை எளியவர்களுக்கு கழிப்பிடம் கட்டுவதற்கு மான்யம் வழங்கும் திட்டத்திற்கான வழிகாட்டுநெறிமுறைகள்:-

1. இத்திட்டம் அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படும்.
2. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் 1,00,000 கழிப்பிட வசதிகள் உருவாக்கப்படும்.
3. மாநகராட்சி, நகராட்சி பகுதிகளில் 20,000 பயனாளிகளும், பேரூராட்சிகளில் 80,000 பயனாளிகளும் இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொறு ஆண்டும் பயனடைவார்கள்.
4. இத்திட்டம் மாநகராட்சி, நகராட்சிகளில் நகராட்சி நிர்வாக ஆணையராலும்,

பேரூராட்சிகளில் பேரூராட்சிகளின் இயக்குநராலும் நிறைவேற்றப்படும்.

5. இத்திட்டத்தின் பயனாளிகள் ஏழை எளியவராக இருத்தல் வேண்டும்.

6. இத்திட்டத்தின் பயனாளிகளை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளே தேர்வு செய்து கொள்ளலாம்.

7. தேர்வு செய்யப்பட்ட பயனாளி தனது இல்லத்தில் கழிப்பிட வசதியை அமைக்க முன்வர வேண்டும்.

8. இவ்வாறு முன்வரும் பயனாளிகளுக்கு அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் இத்திட்ட அனுமதியை வழங்கலாம். திட்ட அனுமதி வழங்கப்பட்ட 3 மாதங்களுக்குள்ளாக பயனாளி தனது இல்லத்தில் கழிப்பிடத்தை அமைத்து அதற்கான விவரத்தை உள்ளாட்சிகளிடம் தெரிவிக்க வேண்டும்.

9. விவரம் பெற்றப்பின் உள்ளாட்சி அமைப்பு கழிப்பிட வசதி சரியான முறையில் அமைக்கப்பட்டுள்ளதா என்பதை சரிபார்த்து இத்திட்டத்திற்கான மான்யம் ரூ.1,000-க்கான காசோலையினை தக்க ஒப்புகை பெற்று வழங்க வேண்டும்.

10. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும் உள்ளாட்சிகளில் எந்தவித வைப்புத் தொகையும் இன்றி இணைப்பு வழங்கவேண்டும். மேலும் பாதாள சாக்கடை வசதி இல்லாத உள்ளாட்சிகளில் பயனாளிகளின் இல்லங்களில் உள்ள கழிவுநீர் தொட்டிகளை அவ்வப்போது சுத்தம் (Empty) செய்யும் சேவையை முதல் மூன்றாண்டுகளுக்கு இலவசமாக அளிக்க வேண்டும்.

11. ஏதேனும் அசாதாரணமான சூழ்நிலையில் கழிப்பிடம் கட்டும் பணி தாமதப்பட்டிருந்தால், பயனாளிகளுக்கு மேலும் மூன்று மாதங்களுக்கு கால அவகாசம் அளிக்கலாம். இதற்கு பின்னும் கழிப்பிடம் அமைக்காத பயனாளிகளை பயனாளிகள் பட்டியலிருந்து நீக்கலாம்.

12. நகராட்சி நிர்வாக ஆணையரும், பேரூராட்சிகளின் இயக்குநரும் தங்களின் கீழ் உள்ள உள்ளாட்சிகளின் தேவைக்கேற்ப குறியீடுகளை நிர்ணயித்து அதற்கான மான்யத்தை கணக்கிட்டு அவற்றை உள்ளாட்சிகளுக்கு உடனடியாக பிரித்து வழங்க வேண்டும்.

13. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர், ஒவ்வொரு மாதமும் இத்திட்டத்தை ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிக்க வேண்டும்.

14. ஒவ்வொரு ஆண்டும் உள்ளாட்சிகளிடமிருந்து இத்திட்டத்திற்கான பயனீட்டு சான்றிதழை (utilisation certificate) பிப்ரவரி மாதத்திற்குள் பெற்று அதனை அரசுக்கு மார்ச் மாதத்திற்குள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

15. இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்துவதற்கு தேவைப்படும் கூடுதல் விளக்கங்களையும் அறிவுரைகளையும் துறைத் தலைவர்கள் வழங்க வேண்டும்.

கே. தீனபந்து
அரசு செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்